**கூட்டுறவுச் சங்கங்களின்மாவட்ட**
**ஆள் சேர்ப்பு நிலையம், சேலம் மாவட்டம்.**

**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்**
**அலுவலகம், சேலம் மண்டலம்**


**முகவரி**
அறை எண்.410, **சேலம் மாவட்ட** ஆட்சித் தலைவர்
அலுவலக வளாகம், சேலம் – 636 001.

இணையதள முகவரி: **www.slmdrb.in**
மின்னஞ்சல் முகவரி: **slmdrb2019@gmail.com**


## அறிவிக்கை எண். 01/2019 நாள்: 28.08.2019

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கீழ்க்காணும் வகை கூட்டுறவுச் சங்கங்களில் பின்வரும் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக, இந்தியக் குடியுரிமையுடைய, பின்வரும் தகுதிகளை பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் http://www.slmdrb.in என்ற இணைய வழியில் மட்டுமே (only through online) 30.09.2019 பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | கூட்டுறவு நிறுவனத்தின் வகை | காலிப்பணியிடங்களின் விவரம் | | பணியிடத்திற்கான சம்பள விகிதம் |
|---|---|---|---|---|
| | | பதவியின் பெயர் | எண்ணிக்கை | |
| 1 | நகர கூ. வங்கிகள் | உதவியாளர் | 29 | சங்கங்களின் வகைக்கு ஏற்ப பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 2 | தொ.வே.கூ.க. சங்கம் | உதவியாளர் | 14 | |
| 3 | பணியாளர் கூ. க. சங்கம் | உதவியாளர் | 4 | |
| 4 | விற்பனைச் சங்கங்கள் | உதவியாளர் | 5 | |
| | **மொத்தம்** | | **52** | |

**மேலே குறிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானது மற்றும் மாறுதலுக்குட்பட்டது.**

**கூட்டுறவு நிறுவனங்கள் வாரியாக காலிப்பணியிடங்கள் பின்வருமாறு**

| வ. எண் | கூட்டுறவு நிறுவனத்தின் வகை | காலிப்பணியிடங்களின் விவரம் | | பணியிடத்திற்கான சம்பள விகிதம் |
|---|---|---|---|---|
| | | பதவியின் பெயர் | எண்ணிக்கை | |
| 1 | **நகர கூ. வங்கிகள்** | | _ | |
| | செவ்வாய்பேட்டை | உதவியாளர் | 2 | 11900-700-17500-850-20900-1050-32450 (1+23) stages |
| | அம்மாபேட்டை | உதவியாளர் | 13 | |
| | சுப்ரமணிய நகர் | உதவியாளர் | 6 | |
| | சங்ககிரி ந.கூ.வ | உதவியாளர் | 3 | |
| | ஆத்தூர் நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 5 | 4300-13850 |
| | **மொத்தம்** | | **29** | |
| 2 | **தொ.வே.கூ.க. சங்கம்** | | | |
| | கெஜ்ஜல்நாயக்கன்பட்டி | உதவியாளர் | 2 | 16000-54000 |
| | கொண்டலாம்பட்டி | உதவியாளர் | 2 | 16000-54000 |
| | மல்லூர் | உதவியாளர் | 2 | 12200-33580 |
| | எஸ். ராஜாபாளையம் | உதவியாளர் | 1 | 16000-54000 |
| | தளவாய்ப்பட்டி | உதவியாளர் | 1 | 16000-54000 |
| | ஏத்தாப்பூர் | உதவியாளர் | 1 | 16000-54000 |
| | பவளத்தானூர் லட்சுமி தொ.வே.கூ.க.ச. | உதவியாளர் | 1 | 4680-10410 |
| | தோளூர் | உதவியாளர் | 1 | 5200-12870 |
| | பொட்டிபுரம் | உதவியாளர் | 1 | 12200-33580 |
| | கோணகாபாடி தொ.வே.கூ.க.ச. | உதவியாளர் | 1 | 4680-10410 |
| | திருவாண்டிப்பட்டி தொ.வே.கூ.க.ச. | உதவியாளர் | 1 | 12200-33580 |
| | **மொத்தம்** | | **14** | |
| 3 | **பணியாளர் கூ. க. சங்கம்** | | | |
| | சேலம்மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் காவலர் கூட்டுறவு பணியாயளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் | உதவியாளர் | 2 | 15000 - 47600 |
| | மேட்டூர் கெமிக்கல்ஸ் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கம் | உதவியாளர் | 2 | 15000 - 47600 |
| | **மொத்தம்** | | **4** | |
| 4 | **விற்பனைச் சங்கங்கள்** | | | |
| | சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | உதவியாளர் | **5** | 4400-25100 |
| | **ஆக மொத்தம்** | | **52** | |

**காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப் பட்டியல்:**

**ஒட்டு மொத்த 52 காலிப்பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு:**

| | | |
|---|---|---|
| பொதுப் பிரிவு | : | 16 |
| பிற்படுத்தப்பட்டோர் | : | 13 |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) | : | 2 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர் மரபினர் | : | 10 |
| ஆதிதிராவிடர் | : | 8 |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | : | 2 |
| பழங்குடியினர் | : | 1 |

<u>குறிப்பு—</u>

மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தமிழ் வழியில் பயின்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான இடஒதுக்கீடு விதிகள் நடைமுறையில் உள்ள அரசு ஆணையின்படி பின்பற்றப்படும்.

அ. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவன பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணை விதிகளுக்குட்பட்டு அமையும்.

ஆ. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவன துணை விதி மற்றும் சிறப்பு துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

இ. தேர்வில் கலந்து கொள்ளும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும்.

**1. முக்கிய நாட்களும் நேரமும்:**

| | | |
|---|---|---|
| 1 | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | 30.09.2019<br>பிற்பகல் 5.45 வரை |
| 2 | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 24.11.2019<br>முற்பகல் 10.00 மணி முதல்<br>பிற்பகல் 1.00 மணி வரை |

**2. தகுதிகள்:**

**அ. வயது**

i) 01.01.2019 அன்று விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்

(அதாவது 01.01.2001 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).

ii) விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள். | : | வயது வரம்பு இல்லை. |
| 2 | பிற வகுப்பினர் (OC) | : | 30 வயதுக்கு மிகாமல். |
| 3 | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | : | வயது வரம்பு இல்லை. |
| 4 | பிற வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | : | 48 வயதுக்கு மிகாமல். |
| 5 | பிற வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | : | 40 வயதுக்கு மிகாமல். |

**ஆ) கல்வித் தகுதி:**

(i) ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு **(Any Degree) (10+2+3 pattern)**

(ii) கூட்டுறவுப் பயிற்சி.

(iii) கணினி பயன்பாட்டில் அடிப்படை அறிவு **(Knowledge in Computer Application)**

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்குப் பதிலாக, பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணி புரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புச் சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறுதித் தேர்விலும் (SSLC) மேல் நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- **கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே** மேற்படி பணியிடங்களின் நியமனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவுப் பயிற்சி குறித்த விரிவான விவரங்கள் அடங்கிய பதிவாளரின் சுற்றறிக்கை எண் 29/2013, நாள் 18.07.2013 சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது பட்டப் படிப்பின் போது தமிழ்மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கணினி பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

  **விளக்கம்:** விண்ணப்பதாரர் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் கணினிப் பயிற்சி பெற்றுள்ளதற்கான சான்றிதழ்.

**இ) பொது**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

- 'ஆதரவற்ற விதவை' என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/–க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுய தொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய **வருவாய் கோட்டாட்சியர் அல்லது மாவட்ட உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

**3. விண்ணப்பக் கட்டணம்**

**அ) விண்ணப்பப் பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ.250/— ஆகும்.**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் சமூக நலத்துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் மேலே 'இ'ல் தெரிவிக்கப்பட்டவாறு உரிய அதிகாரம் பெற்ற அலுவலரிடமிருந்து சான்று பெற்றிருக்க வேண்டும்.

1. **செலுத்துச்சீட்டு முறை (Offline)**

மேற்படி கட்டணம், சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது அதன் கிளைகளில் நேரடியாகச் செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீதில் (Candidate's copy of the chalan) உள்ள Journel ID என்ற எண்ணை விண்ணப்பதாரர், தமது ஆன்லைன் விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidate's copy of the pay-in-slip) scan செய்து பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

2. **இணையவழி முறை (Online)**

தேர்வுக் கட்டணத்தை Online மூலம் State Bank of India இணையதளத்தில் உள்ள **'SBI Collect'** என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தலாம். **'SBI Collect'** என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the 'SBI Collect' service in the State Bank of India online payment portal) சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினை பிரிண்ட் எடுத்துக் கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் DUA…… என்று தொடங்கும் எண்ணை (SBI Collect Reference Number) குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

**இணைய வழி கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.**

ஆ) மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DUA…. எண்ணை பிறரிடம் பகிரக் கூடாது. அதேபோல் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் Jounal ID ஐ பிறரிடம் பகிரக் கூடாது. **ஒரே DUA எண்/ Jounal ID எண், ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் இருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை http://www.slmdrb.in என்ற இணையதளம் மூலம் 30.09.2019 பிற்பகல் 5.45 மணி வரை பதிவேற்றம் செய்யலாம்.**

இ) கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

ஈ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

**4. விண்ணப்பிக்கும் முறை**

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பப் படிவம் **http://www.slmdrb.in** என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

அ) விண்ணப்பப் படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

i) விண்ணப்பதாரரின் புகைப்படம் – 200 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

ii) விண்ணப்பதாரரின் கையெழுத்து – 50 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

iii) விண்ணப்பதாரரின் சாதிச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

iv) மாற்றுத் திறனாளிச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

v) ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vi) கூட்டுறவு பட்டயப் பயிற்சி சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vii) மத்திய கூட்டுறவு வங்கி மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீது (Candidate's Copy of the pay-in-slip) – 100 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format) (செலுத்துச்சீட்டு மூலம் விண்ணப்பக்கட்டணம் செலுத்தியவர்கள்)

viii) கல்வித்தகுதி குறித்த சான்றிதழ்கள் (200 kb அளவுக்கு மிகாமல் (pdf file).

ix) முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சான்று (இருப்பின்)

x) தமிழ் வழியில் கல்வி கற்றதற்கான சான்று (Certificate for studied in tamil Medium)

மேற்குறிப்பிட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது, **விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தது தெரிய வரும் பட்சத்தில் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

ஏற்கனவே பணியில் உள்ள பணியாளர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் கோது, தங்கள் நிறுவனத்தின் உரிய அலுவலருக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும். மேலும், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் பட்சத்தில் உரிய அலுவலரின் தடையில்லா சான்று (NOC) பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**5. எழுத்துத் தேர்வு**

அ) மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்துக் கொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பட்டியல் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் **http://www.slmdrb.in** வெளியிடப்படும்.

எழுத்துத் தேர்வு மாவட்டத்தின் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டில் (Hall Ticket) குறிப்பிடப்படும். எழுத்துத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். எழுத்துத் தேர்வுக்கு தனது சொந்த செலவில் விண்ணப்பதாரர் கலந்து கொள்ள வேண்டும்.

ஆ) எழுத்துத் தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், **பொது அறிவு, அடிப்படை கணக்கியல், கூட்டுறவு சட்டம் மற்றும் வங்கியியல்** போன்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில் (objective Type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாத்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

இ) மேற்கண்ட எழுத்துத் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஈ) எழுத்துத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் எழுத்துத் தேர்வுக்கான வினா விடைகள் (Key answers) சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் (Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்துப் பூர்வமாக அல்லது இமெயில் மூலமாகத் தெரிவிக்க வேண்டும். வல்லுநர் குழு மற்றும் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையக் குழு கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

**6. நேர்முகத் தேர்வு**

i) எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கட்டாயம் தங்கள் சொந்த செலவில் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்துக் கொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பெயர்ப் பட்டியல் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

iii) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்களை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

iv) எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முக தேர்வுக்கான மதிப்பெண் முறையே 85:15 என்ற விகிதத்தில் இருக்கும்.

**7. தெரிவு செய்யப்படும் முறை**

அ) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு மற்றும் இனச் சுழற்சி முறை பின்பற்றப்பட்டு பணியிடத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆ) ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், தமிழ் வழியில் பயின்றவர்கள் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித்தகுதி, கூட்டுறவுப் பயிற்சித் தகுதி, சமூகப் பிரிவு, சிறப்புத் தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் அனைத்தையும் சரி பார்த்த பின்னர், அவற்றைப் பெறத் தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

இ) சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு ஆணை (selection and allotment order) சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். பணியமர்வு ஆணை (appointment order) சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் தகைமை வாய்ந்த அலுவலரால் வழங்கப்படும்.

ஈ) முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு முறை பொருந்தாது.

உ) தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்பிக்க வேண்டும்.

**8. இதர நிபந்தனைகள்**

i) நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தேர்வு சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் ரத்து செய்யப்படும்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

iii) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித் தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை கடைசி நேர மாறுதலுக்குட்பட்டது.

v) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு/ திரும்பப் பெறுவதற்கு/ திருத்துவதற்கு/ கெடு தேதியை நீட்டிப்பதற்கு சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

vi) விண்ணப்பதாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக ‘விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை’ (instructions to candidates) கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

vii) விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பம் பதிவேற்றலில் தாமதமோ அல்லது தொழில் நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு சேலம் மாவட்ட ஆள் சேர்ப்புநிலையம் பொறுப்பாகாது.

viii) விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி உடனடியாக நிறுத்தப்படும்.

ix) விண்ணப்பக் கட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சினை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சினை ஏற்பட்ட 3 நாட்களுக்குள் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

x) கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு 0427–2415158 என்ற உதவி மைய எண்ணிலோ அல்லது slmdrb2019@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்.

இணைப்பதிவாளர்/தலைவர்,
கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்
சேலம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| | சேலம் மா.ஆ.நி<br><br>SALEM D.R.B | **சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**<br>கூட்டுறவு சங்கங்களின்<br>இணைப்பதிவாளர் அலுவலகம்<br>அறை எண்.410,<br>சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம்<br>சேலம் மாவட்டம் – 636 001 |

அறிவிக்கை எண் 03/2019 நாள் 31.08.2019

## திருத்த அறிவிப்பு

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களில் காலியாக உள்ள 52 உதவியாளர் / எழுத்தர் பதவிகளுக்குரிய நேரடி நியமனத்திற்கு சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படவுள்ள எழுத்துத் தேர்விற்கு இணையவழி விண்ணப்பிக்க 28.08.2019 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு www.slmdrb.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றது.

மேற்படி அறிவிப்பில் கல்வி தகுதி பத்தி 2 (ஆ)ல் “கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே” என்பதற்கு பதிலாக “கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மற்றும் 2019–20ஆம் ஆண்டில் கூட்டுறவு மேலாண்மை நிறுவனங்களின் வழி தொலைதூர கல்வி வழியாகவோ அல்லது நேரடியாகவோ கூட்டுறவு பட்டய பயிற்சி பயின்று வரும் மாணவர்கள்” என திருத்தம் அறிவிக்கப்படுகிறது.

இத்தேர்விற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி, வயது வரம்பு, காலியிடம், இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி, தேர்வுக்கான பாடத்திட்டம், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற விவரங்களுக்கு சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளத்தில் (www.slmdrb.in) வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தை காணலாம்.

இணைப்பதிவாளர் / தலைவர்
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்
சேலம்